"செந்தமிழ்"ப்பிரசுரம்—உ௬.

ஸ்ரீ:

கடவுள்துணை

# விக்கிரமசோழனுலா

[மூலம் மட்டும்]

இரண்டாம்பதிப்பு

முன்னைச் "செந்தமிழ்"ப்பத்திராசிரியர்

திரு. மு. இராகவையங்காரவர்கள்

பரிசோதித்தபடி.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை, மதுரை.

1951

—

விலை அணா—8.

ஸ்ரீ:

# பதிப்புரை

'பூவார்சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடக் காமர்மாலை அருகசைய' நடந்து, பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல் உகளக் காய்த்த செந்நெலின்காடுசூழ் காவிரியாறு வளஞ்சுரக்கும் புனல்நாட்டை ஆண்ட அரசருள், குலகிரியின் கொடுமுடிமேற் கொடிவேங்கைக் குறியெழுதி, நிலவுதரும் மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத்தினிதளித்த மலர்புகழ் வண்டமிழ்ச்சோழர்மரபினிலே கி. பி. பன்னிரண்டாநூற்றாண்டில் புலவர்பாடும் புகழுடையராய் நிலவினர் முதற்குலோத்துங்கனும் அவன் மகன் விக்கிரமனும் அவன் மகன் இரண்டாங்குலோத்துங்கனும் அவன் மகன் இராஜராஜனும் ஆவர். இவருள் பிற்கூறிய மூவர்காலத்தும் புலவர்திலகராய்விளங்கி அம்மூவர்க்கும் உலாமாலைசூட்டிய கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர்பெருமை உலகறிந்தது. அவர் இயற்றிய உலாக்களுள் விக்கிரமசோழனுலா கற்றோருள்ளத்தினைக் கொள்ளைகொள்வது.

இவ்வுலாவின் முற்பகுதியில் விக்கிரமசோழனுடைய கல்வி கேள்வி ஒழுகலாறு குடிப்பெருமை கொடைவளம் செங்கோற்சிறப்பு குடியோம்புந்திறம் பகைத்திறந்தெறும்பான்மை முதலியவை புகழுரையாகவும், பிற்பகுதியில் அவன் பவனிவரக்கண்ட எழுவகைப்பருவமகளிரும் மயல்கொண்டு நின்றநிலை புனைந்துரையாகவும் பேசப்பட்டுள்ளன. இவ்வுலாவின் அருமை பெருமைகளும் இதனை இயற்றிய புலவர்பெருந்தகையின் அறிவாற்றல்களும் வரலாறும் முதலியவற்றை விரிக்கிற் பெருகும்.

உலாக்களுள் நாயகமாகவிளங்கும் இதனை முன்னைச் செந்தமிழ்ப்பத்திராசிரியர் திரு. மு. இராகவையங்காரவர்கள் நன்கு ஆராய்ந்து 1908-ஆம் ஆண்டு செந்தமிழ்ப்பிரசுரமாக அச்சிட்டுதவினர்கள். அப்பதிப்புப்புத்தகம் முழுதும் செலவாய்விட்டமையாலும் இவ்வுலா இம்மதுரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளுள் பிரவேசபரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப்பட்டிருத்தலாலும் இதுபொழுது முதற்பதிப்பிலுள்ளபடியே இரண்டாமுறை அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,

திரு. கி. இராமாநுஜையங்கார்,

பதிப்பாசிரியர்.

உ

கடவுள் துணை.

# விக்கிரமசோழனுலா.

1 சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த

2 ஆதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனு—மேதக்க

3 மையறு காட்சி மரீசியு மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனு—மையல்கூர்

4 சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த [1]மனுவோனும்—பைந்தடத்

5 தாடு துறையி லடுபுலியும் புல்வாயுங்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்—நீடிய

6 மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக புவிபுரந்த [2]பூபதியும்—யாகத்துக்

7 கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனு—மாறழிந்

8 தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியுங்—கூடார்தந்

9 தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் [3]கீழ்கடலில் விட்டோனு—மாங்குப்

10 பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா னாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவு—முலகறியக்

11 காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனு—மேக்குயரக்

[பிரதிபேதம்.] 1 மறவோனும். 2 பூபதியு—மாகத்துக். 3 கீழ்கடற்கு.

*

12 கொள்ளுங் குடகக் குவடு டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனுந்—தெள்ளருவிச்

13 சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியு—மின்னருளின்

14 மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட [1]பார்த்திவனு—மீதெல்லா

15 மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனுங்—[2]கண்கொண்ட

16 கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனுந்—தூதற்காப்

17 பண்டு பகலொன்றி லீரொன் பது[3]சுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோனுந்—[4]தண்டேவிக்

18 கங்கா நதியுங் கடாரமுங் [5]கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும்—வங்கத்தை

19 முற்று முரணடக்கி மும்மடிபோய்க் [6]கல்யாணி
செற்ற [7]தனியாண்மைச் சேவகனும்—பற்றலரை

20 வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமுங்
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனு—மப்பழநூல்

21 பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியா
லாடரவப் பாய லமைத்தோனுங்—கூடலார்

22 சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனு—மங்கவன்பின்

23 காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தஞ்

24 சேலைத் துரந்து [8]சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினன்—மேலைக்

---

[பி-ம்] [1]பார்த்திபனும். [2]கண்கொண்டு. [3]சிரமுங்; [4]தண்டினற். [5]கைவரச்; கைவரக், கங்கா புரிபுரந்த கற்பகமும். [6]கல்யாணம். [7]தனியானைச். [8]சிலையைக்கடிந் திருகாற்.

25 கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
[1]டடல்கொண்ட மாராட் டரசை—யுடலை

26 யிறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி

27 [2]வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்

28 [3]தோன்றியகோன் விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரச முகின்முழங்க—நோன்றலைய

29 மும்மைப் புவனம் புரக்க [4]முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோ [5]றிசையளப்ப—வெம்மை

30 விடவுட் படுத்து விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறுங் கவிப்பச்—சுடர்சேர்

31 இணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூட்டப்—பணைத்தேறு

32 நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றுற் பொதுநீக்கிச்—சீராரு

33 மேய திகிரி விரிமே கலையல்குற்
றூய நிலமடந்தை தோள்களினுஞ்—சாயலி

34 னோது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்—போதில்

35 நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினு
முறைகின்ற நாளி லொருநா—ளறைகழற்காற்

36 றென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து—தென்னர்

---

[பி-ம்.] [1]டடல்கொண்ட மாராட் டரசை - யடலை; டடல்கொண் டமரா டரசை - யுடலை; டடல்கொண் டமரா டரச - ருடலை. [2]வாரிப் புவனம் வலமாகத் தந்தளிக்கும். [3]தோன்றிய விக்கிரம. [4]முடிசூடிச். [5]திசை யளப்பத் - தம்மை, விடவுட் படுத்த.

37 வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற—விரவிட்ட

38 நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயன்மேற்
றொத்தலர் மாலைத் துணைத்தோளு—மைத்தடங்

39 கண்ணு முலையும் பெரிய களியன்ன
மெண்ணு முலகங்க ளேழுடைய—பெண்ணணங்கு

40 பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுட
னெய்திய பள்ளி யினிதெழுந்து—பொய்யாத

41 [1]பொன்னிப் புதுமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து—முன்னை

42 மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மௌலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக்களத்துச்

43 செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த

44 [2]தானத் துறைமுடித்துச் சாத்துந் [3]தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்

45 சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க—வாழுந்

46 தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப்—படருந்

47 தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்—பிணிப்பின்

48 முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க—[4]வுயங்கா

49 அருங்கொற்ற மார்க்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் [5]வாய்ப்பப்—பொருந்திய

---

[பி-ம்.] [1]பொன்னித்திருமஞ்சன; பொன்னித்துறைமஞ்சன. [2]தானத் தொழின். [3]தகைமையின். [4]முயங்கா. [5]வாய்ப்பத் - திருந்திய.

50 வண்ணற் [1]படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைத்துக்—கண்ணுதலோன்

51 காமன் [2]சிலைவணங்க வாங்கிய [3]கட்டழகு
தாம [4]முடிவணங்கத் தந்தனைய—காமருபூங்

52 கோலத் தொடுபெயர்ந்து கோயிற் புறநின்று
[5]காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

53 தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான்றடவி—வானுக்

54 கணியு மருப்பு மடற்கையு மின்மை
தணியும் யமராச தண்டந்—தணியாப்

55 பரிய பெருங்கோ டிணைத்துப் பணைத்தற்
[6]குரிய தொருதானே யாகிக்—கரிய

56 [7]மலைக்கோ டனைத்து மடித்திடியக் குத்துங்
கொலைக்கோட்டு வெங்கால கோப—மலைத்தோட

57 வூறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு மதம் [8]பொரு வேகத்தாற்—கூறொன்றத்

58 தாங்கிப் பொறையாற்று தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுது—மோங்கிய

59 கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதா—முற்ற

60 வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப்—பெருக்கத்

61 துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
யவற்றி னபரங்கண் டாறி—யிவற்றை

62 அளித்தன னெங்கோமா னுதலா [9]வின்று
களித்தன வென்றுவக்குங் காற்று—நெளித்திழிய

---

[பி-ம்.] [1]படிமத். [2]சிலைவாங்க; சிலைவணக்க. [3]கட்டழகைத். [4]முடிவணக்கத். [5]காலத்திருக்கும். [6]கரிய. [7]மலைக்கோடடைய. [8]பெரு. [9]னன்று.

63 வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரி
லேற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக்—கூற்றுக்

64 கருத்து மயிரா வதநின் றதனை
யிருத்தும் பிடிபடியா வேறித்—திருத்தக்க

65 கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரிகளின் காலசைப்ப—வொற்றை

66 வலம்புரி யூத [1]வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப்—[2]புலம்பெயர்ந்து

67 வாட்படை கொட்ப மறமன் னவர்நெருங்கக்
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச்—சேட்புலத்துத்

68 தென்னரு மாளுவருஞ் [3]சிங்களருங் கொங்கணத்து
மன்னருந் தோற்க [4]மலைநாடு—முன்னநங்

69 குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தோண்டை மானும்—[5]பலர்முடிமே

70 லார்க்கும் [6]கழற்கா லனகன் றனதவையுட்
பார்க்குமதி மந்த்ர பாலகரிற்—போர்க்குத்

71 [7]தொடுக்குங் கமழ்தும்பை தூசினெடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனு—முடுக்கரையுங்

72 கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையுங்
கொங்கரையு மேனைக் குடகரையுந்—தங்கோன்

73 முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனுஞ்—சனபதிதன்

74 றேளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளும் [8]புலியு மதியமைச்சு—நாளுமா

---

[பி-ம்.] [1]வளைக்குலங்களார்ப்பச். [2]புலம்பயில்; புலம்பெயர். [3]சிங்களருந் தோற்றுதகை. [4]மலைநாட்டார்; மலைநாடர். [5]பலமுடிமே. [6]கழற்காலபயன். [7]தொடுத்துப் புனைதும்பை தூசினெடுஞ் சூடக் கொடுத்த புகழ். [8]வலியு.

75 மஞ்சைக் கிழித்து வளரும் [1]பெரும்புரிசைக்
கஞ்சத் திருமறையோன் கண்ணனும்—[2]வெஞ்சமத்துப்

76 புல்லாத மன்னர் [3]புலாலுடம்பைப் பேய்வாங்க
வொல்லாத கூற்ற முயிர்வாங்கப்—[4]புல்லார்தந்

77 தாங்கு மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்—வேங்கையினுங்

78 கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்து
மோடா விரட்டத்து மொட்டத்து—நாடா

79 [5]தடியெடுத்த வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனுங்—கடியரணச்

80 செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும்—வெம்பிக்

81 கலக்கிய வஞ்சக் [6]கலியதனைப் பாரில்
விலக்கிய வேணாடர் வேந்துந்—தலைத்தருமம்

82 வாரிக் குமரிமுதன் மந்தா கினியளவும்
பாரித் தவனனந்த பாலனும்—பேரமரின்

83 [7]முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலு
மட்டித்த மால்யானை வத்தவனு—மட்டையெழக்

84 காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் [8]சேவகனும்—பூதலத்து

85 முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய [9]காராணை காவலனு—மொட்டிய

86 மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை [10]துணித்த வதிகனு—மீனவர்தங்

---

[பி-ம்.] [1]பொழிற் புரிசைக். [2]வெஞ்சமரிற். [3]புலாலுடம்பு. [4]புல்லார்வந் தாங்கு மடமாதர். [5]தடியெடுத்து; வடியெடுத்து; வடியெடுத்த. [6]கலியாணர்போரில். [7]முட்டிப்பொருத வடமன்னர். [8]செல்வனும். [9]காரரணை. [10]துணித்த தவதிகனும்.

87 கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட [1]குடைநுளம்பன்
வாட்டார் மதயானை [2]வல்லவனு—மோட்டரணக்

88 கொங்கைக் குலைத்துக் [3]குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனு—மங்கத்து

89 வல்லவனுங் கோசலனு மாகதனு மாளுவனும்
வில்லவனுங் கேரளனு மீனவனும்—பல்லவனு

90 மென்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்டப்—பன்மணிச்

91 சோதி வயிர மடர்க்குஞ் சுடர்க்குழையார்
வீதி குறுகுதலு மேலொருநாண்—மாதவத்தோன்

92 சார்ந்த பொழுதனங்கன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்று—மேந்திப்

93 பரக்குங் கலையல்குற் பாவையரே யானை
புரக்குந் திருநாடு போன்றும்—[4]வாக்கருதா

94 ஏனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றுங்—கானலங்

95 கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றுங்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்று—மண்டு

96 [5]திரைதொறுந் தோன்றுந் திருக்குழாம் போன்றும்
[6]வரைதொறுஞ்சேர்மயில்கள்போன்றும்—விரைவினராய்

97 இந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும்—வந்தீண்டி

98 உத்தி சுடர வொளிமணிச் சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப—முத்தி

99 னிணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங்கு தலையினராய் வந்து—கணங்கொண்டு

---

[பிரதிபேதம்.] [1]கொடைநுளம்பன். [2]வல்லவனுங் - கோட்டரணக். [3]குடகைக்குவடிடித்த. [4]வாற்கரிதா மேனை முனிக்குறும்பு. [5]திரை தோறுங். [6]வரைதோறுந் தோன்றுமயில் போன்றும் - விரவினராய்.

100 பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் [1]கிஞ்சுகவாய்க்
கூர்க்கு மெயிறு[2]வெறுங் கோளிழைப்ப—வேர்க்க

101 வரைகொ ணெடுமாடக் கீணிலையின் மல்கி
யுரக வரமகளி ரொப்பார்—விரல்கவரும்

102 வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
[3]பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச்—[4]சேணுயர்

103 மஞ்சிவரும் வெண்பளிக்கு மாடத் திடைநிலையின்
விஞ்சையர் மாத ரெனமிடைவா—[5]ரஞ்சனக்

104 கண்ணிற் சிறிது மிமையாத காட்சியு
மண்ணிற் பொருந்தா மலரடியுந்—[6]தண்மலர்

105 வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற்—கூடி

106 யுருவி னொளியி னுணர்வி னுரையிற்
பொருவி லரமகளிர் போல்வார்—அருகணைந்து

107 சீரள வில்லாத் திருத்தோ ளயன்படைத்த
பாரள வல்ல பணைப்பென்பார்—பாருமின்

108 செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார்—கையிரண்டே

109 ஆனபோ தந்த முருகவே ளல்லனிவன்
[7]வேனில்வேள் கண்டீ ரெனமெலிவார்—[8]யானெண்ணு

110 மெண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார்—மண்ணளிக்கும்

111 ஆதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்று லெனப்பகர்வார்—தாதெடுத்த

112 கொங்கை பசப்பார்தங் கோல்வளை காப்பார்போற்
செங்கை குவிப்பார் சிலர்செறிய— அங்கொருத்தி

---

[பி-ம்.] [1] கிஞ்சுகவாய். [2] பெறுங் கோளிழைப்பப். [3] பாணி பெயரப் பதம்பெயர்த்து. [4] நீணிலா. [5] அஞ்சனவேற். [6] தண்ணென்ற. [7] வேனல் வேள். [8] மானனையா ரெண்ணுக்.

## பேதை.

113 வந்து பிறந்து வளரு மிளந்திங்கட்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து—பைந்தழைத்
114 தோகை [1]கொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு—கோகிலத்தின்
115 பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை—கள்ளந்
116 தெரியாப் பெருங்கட் சிறுதேறல் தாயர்
பிரியாப் பருவத்துப் பேதை—பரிவோடு
117 பாவையு [2]மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்—காவலன்
118 பொன்னிப் புகார்முத்தி னம்மனையுந் தென்னுகை
நன்னித் திலத்தி னகைக்கழங்குஞ்—சென்னிதன்
119 கொற்கைக் குளிர்[3]முத்தின் கோலமணி வல்சியுங்
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப்—[4]பொற்கொடியார்
120 வீதி புகுந்து விளையாடு மெல்லைக்கண்
ஆதி யுகம்வந் தடிக்கொள்ள—[5]மேதினிமே
121 லொன்று [6]கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரசு முழங்குதலும்—[7]வான்றுணைத்
122 தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்—சேயோன்
123 [8]படியின் மதியும் பகலவனுந் தோற்கு
முடியி லொருகாலு மூளா—வடிவின்
124 [9]மகிழ்ந்து மலராண் மலர்க்கண்ணு நெஞ்சு
நெகிழ்ந்த திருநோக்கி னேரா—முகிழ்ந்து

---

[பி-ம்.] [1] தொடாமஞ்ஞை. [2] மானும் பயிலும். [3] முத்தவல்சியுஞ் சோறடவு; முத்த வல்சியுஞ் சோறடுகை. [4] பொற்றொடியார்; பொற்றொடியாள். [5] மேதினியி. [6] கலிகடந்த வுத்துங்க சோழன்றன். [7] வான்றுணையாய்த். [8] படியுமதியும். [9] மகிழ்ந்த.

125 சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திரு[1]நிலவில் வீழா—பரிக்கும்

126 உலகம் பரவுந் திருப்புருவத் தோடா
திலக முகாம்புயத்திற் சேரா—பலவுந்

127 திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
விசையுந் திருமார்பத் தெய்தா—வசையிலாக்

128 கைம்மலரிற் போகா வடிமலரிற் கண்ணுரு
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதூரா—வம்மகள்

129 கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுது
நண்ணுந் தொடையன்மே னுட்செய்ய—வுண்ணெகிழா

130 வம்மின்க ளன்னைமீர் மாலை [2]யிதுவாங்கித்
தம்மின்க ளென்றுரைப்பத் தாயரு—மம்மே

131 பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேங்—திருமாலை

132 யாங்கொள்ளும் வண்ண மெளிதோ வரிதென்னத்
தேங்கொள்ளு மின்சொற் சிறியாளு—மாங்குத்தன்

133 மார்பத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளு
மார்வத்துக் கன்றே யடியிட்டாள்—சேர

134 விருத்தி மணற்சோ றிளையோரை [3]யூட்டு
மருத்தி [4]யறவே [5]யயர்த்தாள்—ஒருத்தி

## பெதும்பை.

135 மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து [6]கொண்டாள்—நிழல்விரவு

136 முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்—கன்னி

137 மடநோக்கந் தான்வளர்த்த மானுக்கு விட்டு
விடநோக்க வேலிரண்டு கொண்டாள்—[7]சுடர்நோக்குந்

---

[பி-ம்.] 1 நிலவின். 2 யதுவாங்கித். 3 யூட்டி யருத்தி. 4 நடுவே. 5 யயர்ந்தாள். 6 கொள்வாள். 7 சுடரிழை.

138 தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்—[1]பூநறும்

139 பாவைதன் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள்—மேவு

140 மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்—சுடர்கனகக்

141 கொத்துக் குயின்ற கொடிப்[2]பவள பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியா—ளெத்திறத்தும்

142 வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேன்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்—நேரொத்த

143 கோங்க முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்—பாங்கியருந்

144 தாயரும் போற்றுமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்—றியாயே

145 தளரு மிடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி—கிளருங்

146 கொழுந்து மளவிறந்த கொந்துங் கவினி
யெழுந்து [3]கிளைகவிப்ப வேறித்—தொழுந்தகைய

147 கொங்குடையபொன்னடருஞ்சென்னிக்கொழுங்கோங்கின்
பங்குடைய மூரிப் பணையணைந்—தங்குடைய

148 வண்டு முரல மணநாற [4]வைகுமது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்—கொண்டு

149 வருக வருக மடக்கிள்ளை முத்தந்
தருக தருகவெனத் தாயர்—[5]பெருக

150 விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே—பெரும்புயங்கள்

151 புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்து—மெல்லை

---

[பி-ம்.] [1] பூநாறும். [2] பவளப் பந்தத்தின். [3] சினைகவிப்ப. [4] வைகுவது. [5] விரவி.

152 யரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத—முரசந்
153 தழங்கு மறுகிற் றமரோடு மோடி
முழங்கு [1]முகின்மாட முன்றிற்—கொழுங்கயற்கட்
154 பொன்னென [2]வெல்லா வழகும் [3]புணர்ந்ததொரு
மின்னென வந்து வெளிப்பட்டு—மன்னருயி
155 ருண்டாற் றியவேங்கை வைக்க வொருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத்—தண்டாத
156 வேகங் கெடக்கலிவாய் [4]வீழ்ந்தாற்றும் பார்மகளைச்
சோகங் [5]கெடுத்தணைத்த தோளானை—யாகத்துக்
157 கொங்கை பிரியாத வீறேடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பானை—யங்கமலக்
158 கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலைத்—தையலுங்
159 கண்டகண் வாங்காள் தொழமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள்—பண்டறியாக்
160 காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்றாள்—நாமவேற்
161 சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனு மவ்வெல்லை விட்டகன்றான்—மாரனுந்
162 தக்குத் தகாதானை யெய்து [6]தரைப்படுத்துப்
புக்குத் தொடைமடக்கிப் போயினான்—மைக்குழல்

## மங்கை.

163 மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்ன—மெங்கோனை
164 மன்னனை மன்னர் பிரானை வரோதயனைத்
தென்னனை வானவனைச் செம்பியனை—முன்னொருநாட்

---

[பி-ம்.] [1] நெடுமாட. [2] வெல்லா மழகும். [3] புனைவதொரு. [4] வீழ்ந்தாற்று பார்மகளை; வீழ்ந்தரற்றப் பார்மகளை. [5] கெடுத்தெடுத்த; கெடுத்தணைந்த. [6] தரைப்படுத்தப்.

165 கண்ட பெதும்பைப் பருவத்தே தன்[1]கருத்திற்
கொண்ட பரிவு [2]கடைக்கூட்டப்—புண்டரிகச்
166 செய்ய வடிமுதலாச் செம்பொன் முடியளவு
[3]மைய லகல மனத்திழைத்துக்—கையினாற்
167 றீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாங்
காட்டுங் [4]கனவு தரக்கண்டு—நாட்டங்கொண்
168 டியாதொன்றுங் காணா திருப்பாள் பொருகளிற்றுத்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்—வீதி
169 வருகின்றா னென்று மணியணிகள் யாவுந்
தருகென்றாள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை
170 சூடினாள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
றாடினா டன்பே ரணியணிந்தாள்—சேடியர்
171 காட்டும் படிமக் [5]கலத்துக் கமலத்தை
யோட்டும் வதனத் தொளிமலர்ந்து—கேட்டு
172 விடைபோ மனங்கன்போல் வேல்விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கங்—கடைபோய்
173 மறித்து [6]மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
யெறிக்குங் குழைக்காதிற் கேற்றா—நெறிக்கு
174 மளக முதலாக வைம்பாற் [7]படுத்த
வளர்கருங் கூந்தன் [8]மலிந்துங்—கிளர
175 வரியன நித்திலத்தி னம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்துந்—தெரியற்
176 சுவடு படுகளபத் [9]தொய்யில்சூழ் கொங்கை
குவடு படவெழுச்சி கொண்டுந்—[10]திவடாம
177 முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்று
நொந்து மருங்கு லுடங்கியும்—வந்து

---

[பி-ம்.] 1 கருத்தாற். 2 கடைகூட்டப். 3 மைய லகலா மனத்தெழுதிக். 4 கனவுதரக் காணுங்கால். 5 கலத்திற். 6 மதமதர்த்து; மிகமதர்த்து. 7 படுக்க. 8 மலிந்து—கிளிர. 9 தொய்யில்வாய். 10 திவடர.

178 மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
வடையுந் தனதுருக்கண் டஞ்சிக்—கொடையனகன்

179 பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்
கண்டறியு [1]மவ்வடிவு காண்கிலேன்—பண்டறியு

180 முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி
யென்னை [2]யறிகலன்யா னென்செய்கேன்—றன்னை

181 வணங்கி வருவ தறிவ னெனவந்
திணங்கு மகளி ரிடைநின்—றணங்கு

182 மிறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்—முறைமையாற்

183 காக்குங் கடல்கடைந்த கைம்மலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த [3]பொற்கழலு—நோக்குந்

184 திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பு—முருக்கு

185 மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்குந்—துகிரொளியை

186 வெளவிய கோல மணிவாயு மெப்பொழுதுஞ்
செவ்வி யழியாத் திருமுகமு—மெவ்வுருவு

187 மாறு படா [4]வண்ண மண்ணல் படிவத்து
வேறு படுவனப்பு [5]மெய்விரும்பித்—தேறும்

188 பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்பல்
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்—கிறைவனைக்

189 கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை—பண்டு

190 நனவு கிழியிற் பசுறக்கண்டு நல்ல
கனவு தாவிரவிற் கண்டு—மனமகிழ்வாள்

---

[பி-ம்.] [1] மவ்வறிவு. [2] யறிகிலே னென்செய்கேன். [3] பூங்கழலு.
[4] வண்ணமவ் வண்ணல் படிவத்து; வண்ணமுந்தன் வண்ணப் படிமத்து.
[5] மெய்விரும்பத்—தேறிப்.

191 தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளும்
[1]நாட்ட முறங்கா மையைநல்க—மீட்டுப்

192 பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையி தப்பாற்—சயங்தொலைய

## மடந்தை.

193 வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினு—ளந்தமி

194 லோலக் கடலேழு மொன்று யுலகொடுக்குங்
காலக் [2]கடலனைய கட்கடையாள்—ஞாலத்தை

195 வீட்டி வினைமுடிக்க வெங்கால [3]தூதுவர்கள்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள்—நாட்ட

196 வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள்—கடிதோடிப்

197 போகா தொழியா திடை[4]யென்று போய்முடிய
லாகாமை கைவளரு மல்குலாள்—பாகாய

198 சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி—வல்லிநாஞ்

199 சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் [5]கண்டிருப்பக் கொண்டாடி—யாடினு

200 லென்மாலை நீகொள்வ [6]தியான்கொள்வ தெங்கோமான்
றன்மாலை வாங்கித் தருகென்று—[7]மின்னனையாள்

201 வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி—யொட்டிப்

202 பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
யிருதிறத்துக் கந்துகமு மேந்திப்—பெரிது

---

[பி-ம்.] [1] வாட்ட முறங்கா மையுநல்க—மீட்டும். [2] கடையனைய. [3] தூதுவர்போற். [4] யொன்று போய்முடிய லாகா தெனவளரு. [5] கண்டு வப்பக். [6] தியாங்கொள்வ. [7] பொன்னனையாள்.

203 [1]மழுந்து தரளத் தவைதன்னைச் சூழ
விழுந்தெழுந்து மிடைய—வெழுந்துவரி

204 சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப—முந்திய

205 செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்—தங்க

206 ளுடங்கு கொடிமருங்கு [2]ஞெந்தசைந்த தென்றென்
றடங்கு கலாப மரற்றத்—தொடங்கி

207 யரிந்த குரலினவா யஞ்சி றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப—விரிந்தெழுசெங்

208 கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின்மேல் வண்டிரங்க—வக்கோதை

209 பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று—பைந்துகிற்

210 றானை பிடித்தலைக்கும் போதிற் றனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச்—சேனை

211 மிடையப் பவளமு நித்திலமு மின்ன
வடையப் பணிலங்க ளார்ப்பப்—புடைபெயர்

212 வார்ந்து [3]மகர வயமீன் குலமுழுதும்
[4]போந்து மறுகு புடைபிறழச்—சேர்ந்து

213 பதலை முழங்கப் பகடேற்றி விட்ட
மதலைகண் முன்னர் மலிய—விதலையாய்த்

214 தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் [5]தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட—வீழுந்திக்

215 கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் [6]தோயப் புகார்விளங்க—மன்னிய

---

[பி-ம்.] [1] மெழுந்து தரளத் திவைதன்னைச்; மழுந்துறு தானத் தவை தன்னைச். [2] ஞெந்தொசிந்த. [3] மகளிர் வயமின் குலமுழுதும். [4] பேர்ந்து மறுகும் படிபிறழச். [5] தண்டடைந்து. [6] தோயும் புகார்.

216 செங்கோற் றியாக சமுத்திர நண்ணுதலுந்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்—தங்களி

217 லொட்டிய வொட்ட முணராதே தோள்வளையுங்
கட்டிய மேகலையுங் காவாதே—கிட்டித்

218 தொழுதா ளயர்ந்தா டுளங்கினாள் சோர்ந்தா
ளழுதா ளொருதமிய ளானாள்—பழுதிலாக்

219 காக்குந் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று—வீக்கு

220 மணிக்கச்சுந் தம்முடைய வான்றாசுங் கொங்கை
[1]பணிக்கக் கடைக்கண்கள் பாரா—வணிக்கமைந்த

221 குன்றாத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றாத பட்டும் புனைகென்று—நின்று

222 கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானு
[2]மடுத்தனர் தோண்மே லயர்ந்தாள்—கடுத்துக்

223 கவரு மனங்கனுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித் தாய—ரவரெங்குங்

224 கூசினார் [3]சந்திற் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினா ராவி [4]பொழிந்தொழிந்தார்—வீசினா

225 ரிட்டார் நிலவி விளந்தென் றலுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்—விட்டாரோ

226 பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போ
லுள்ள முயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்

227 னோதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—மாதரில்

---

[பி–ம்.] [1] பணிக்கப் படைக்கண்கள். [2] மடுத்தன. [3] சந்து. [4] பொழிந்தெழுந்தார்.

## அரிவை.

228 வாரி [1]படுமமுத மொப்பாண் மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி—யூரித்தேர்த்

229 தட்டுஞ் சிறுகப் பெருகு மரகதத்திற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டுந்

230 துகிலுங் கரப்பச் சுடர்பரப்பிக் கைபோ
யகல்கின்ற வல்கு லரிவை—யிகலி

231 யொருக்கி மருங்குகடிந் தொன்றிணைவந் தொன்று
[2]நெருக்கிய மாமை நிரம்பித்—தருக்கி

232 யிடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—தடங்கொண்

233 டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்

234 பெருமை யுவமை [3]பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னங்—கருமை

235 யெறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு—மறித்து

236 மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—[4]ததைத்துக்

237 கழுநீர் மலரின் கவினழித்து மானின்
விழுநீர்மை வாய்த்த விழியாள்—முழுது

238 நெறிந்து கடைகுழன்று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி—நறுந்துணர்

239 வார்ந்து [5]கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து [6]மிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்து

[பி-ம்.] [1] படுமமுதை யொப்பாண். [2] நெருக்கி யமைய நிரம்பித். [3] பிறங்குநீர் ஞாலத். [4] ததைத்துக், கழுநீ ரிதழின். [5] கொழுந்தெழுந்து. [6] மிசையசைந்து.

240 திருவிருந்த தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள்—பொருகளிற்றின்

241 வந்து மறுகி லொருநாண் மனுகுலத்தோன்
றந்த பெரிய தனிமைக்கட்—[1]செந்தமிழக்

242 கோனே கவர்ந்தெம்மைக் [2]கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோற்—பூநே

243 ரிணைக்கையுந் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா—[3]மணக்கூந்தல்

244 போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்—சோதி

245 யடுக்குங் கனபொற் [4]கலைபேணா தல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா—தெடுக்குங்

246 கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழு
நெருப்புக் குருகி நிறைபோ—யிருப்புழிப்

247 பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
யாடிய தோகைக்கு மன்பின்றிக்—கூடிய

248 கிள்ளைக்குந் தம்மிற் [5]கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றாள் பெயர்ந்துபோய்க்—கொள்ளை

249 பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி—வயக்களிற்று

250 மன்னன் குலப்பொன்னி வைகலு மாடுதிரா
லன்னங்கா ணீரென் றழிவுற்றுஞ்—சென்னி

251 பெருகும் புகாரடையப் பெற்றீரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்துங்—கருகிய

252 [6]நீலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீ ரெனத்துவண்டும்—[7]பீலிய

---

[பி-ம்.] [1] செந்தனிக்கோற். [2] கொண்டன வெங்களுக்குத். [3] மணிக்கூந்தல். [4] துகில்பேணா. [5] கிளருங் களியன்னப். [6] கோலக். [7] பீலியம்.

253 பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியு
நேரியுஞ் சேர்வீ ரெனநெகிழ்ந்து—நேரியன்

254 [1]தண்டுழாய் மாலை பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டுந்—[2]தொண்டிக்கோன்

255 மன்றன் மலையத்து வாளருவி தோய்ந்தன்றே
தென்றல் வருவ தெனத்திகைத்து—நின்றயர்கான்

256 மன்னற்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில [3]முழங்குதலுந்—தன்னிற்போய்ப்

257 பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்—காணுங்கா

258 லேய்ப்ப வெதிர்வந் திரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்—[4]போய்ப்பெருகு

259 மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்—சோதி

260 குழைய [5]நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்—பிழையாத

261 பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்—சென்னிக்குப்

262 பாராண் முலையாலும் பங்கயத்தா டோளாலும்
வாரா விருப்பு வருவித்தா—ளோரணங்கு

## தெரிவை.

263 கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரின்
போது புலராப் பொலங்கொம்பு—மீது

264 முயலா லழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலா லழுங்காப் புதுமின்—னியல்கொண்

---

[பி-ம்.] [1] தண்டுளப வாம்ப லறுகாலுந் தைவந்து. [2] தெண்டிரைக் கோன். [3] முழங்குதலு—மின்னிற்போய்ப். [4] போய்ப்பெயர. [5] நடுவொதுக் குங்; நடுவொதுங்கக்.

265 டெழுதாத வோவ மெழுசிறைய வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொந்து—முழுது

266 மிருளாக் கலாபத் திளந்தோகை [1]யென்றுந்
தெருளாக் களியளிக்குந் தேறல்—பொருளால்

267 வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கு
மருந்தத் தெவிட்டா வமுதம்—[2]திருந்திய

268 சோலைப் பசுந்[3]தென்ற றூது வரவந்த
மாலைப் பொழுதின்கண் மண்டபத்து—வேலை

269 விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த [4]பனிக்கற்றை தூங்கப்—[5]பரிந்துழையோர்

270 பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்—தேசிகப்

271 பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடுஞ்
சேர வினிதிருந்த செவ்விக்கண்—ணேரியுங்

272 கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி யயிரா பதப்பகடு—மாழியான்

273 சூடிய வாரமு மாணையுஞ் சோணாடுங்
காடு [6]திரைத்தெறியுங் காவிரியும்—பாடுகெனக்

274 கூன வியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேனி லரசனுந்தன் வில்லெடுத்தான்—[7]றேனிமிர்

275 [8]தந்திரி யாழ்ப்பாணன் றைவந்தான் றைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லிணாண்—முந்த

276 நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
றிறன்மதனு மம்பு தெரிந்தான்—விறலியொடும்

277 பாண னொருபாணி கோத்தான் பலகோத்தான்
றாணி தொலையச் சுளிந்துவேள்—மாண

---

[பி-ம்.] [1] யார்க்குந். [2] பொருந்திய. [3] தென்றற் றூது. [4] மணிக்கற்றை. [5] புரிந்திளையோர். [6] திரைத்திரைக்குங்; திரைத்தலைக்குங். [7] றேனிமிரத். [8] தந்திரி பாணன் றடவத்தான் றைவந்தான்; தந்திரி பாணன் றடவந்தான் றைவந்தான்.

278 விசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி—விசைத்தெழுந்த

279 வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச்—சேணுலாம்

280 வாடை யனைய மலையா நிலந்தனையுங்
கோடை யிதுவென்றே கூறினாள்—நீடிய

281 வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றா—ளூரெலாங்

282 காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
[1]தாக்கும் பறையென்றே சாற்றினாள்—சேக்கைதொறும்

283 வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள்—கோழிக்கோ

284 னெங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றாள்—கங்குல்

285 புலருந் தனையும் புலம்பினா ளாங்குப்
பலரும் பணிந்து பரவக்—குலகிரிசூ

286 ழூழிப் புவன மடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—யாழி

287 னிழைக்கு மிசைமுதலா [2]வெப்பகைக்கு மாற்றா
துழைக்கு முயிர்[3]தழைப்ப வோடிப்—பிழைத்தனளாய்

288 முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை—யெட்டுந்

289 தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே—செருக்கிப்

290 பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
யிருந்த [4]வடவரைக ளெல்லாந்—திருந்தா

291 விதையம் [5]பொருதழித்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே—சிதையாத

---

[பி-ம்.] [1] தாக்கு முரசென்றே. [2] வெப்பகையு. [3] தளிர்ப்ப. [4] தட வரைக. [5] பொருதழிந்த; பொருதிழந்த.

292 திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கு
மங்கட் பழங்குமரி யாற்றிற்குந்—தங்கள்

293 படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ
விடிக்குந் தனியசனி யேறே—கடிப்பமைந்த

294 யாம முரசா லிழந்த நிறை[1]நினது
தாம முரசு தரப்பெற்றேன்—[2]நாம

295 விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசை புலர்ந்தேன்—தடமலைமே

296 [3]லாறு மலையக்கால் சுட்டசூ டுன்செவியின்
மாறாப் பெருங்காற்றான் [4]மாற்றினேன்—வேறாகக்

297 கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்—மூசிய

298 காருலா மோதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்—பேரிரவி

299 லென்மே லனங்கன் [5]வரவந்த வின்னலெல்லா
நின்மே லனகன்வர நீங்கினேன்—[6]இன்னும்

300 கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோகப் போதும் பொருப்பே—விடைபோய்நீ

301 ராட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்—கேட்டருளாய்

302 கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே [7]புடைத்துதிர்ப்பாய்—பார்நாதன்

303 செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவா—யெங்கட்

304 குயிரா யுடலா [8]யுணர்வாகி யுள்ளா
யயிரா பதமேநீ யன்றே—பெயராது

305 நிற்கண்டா யென்றிரந்து நின்றா ளுதலாக [கோன்
விற்கொண்ட பேரிளம்பெண் வேறொருத்தி—கொற்கையர்

---

[பி-ம்.] [1] யுனது. [2] எம; சேம. [3] லாறு மலையக்கா லட்டசூ. [4] மாறினேன். [5] பொரவந்த. [6] இன்னம். [7] புடைத்துகுப்பாய். [8] யுறவாகி.

## பேரிளம்பெண்.

306 மல்லற் [1]புயத்தங்கன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினு—ளெல்லையில்

307 கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய வல்குலாள்—சேடியாய்த்

308 தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்—செம்மை

309 நிறையு மழகா னிகரழித்துச் செய்யா
ளுறையு மலர்பறிப்பா ளொப்பாள்—நறைகமழு

310 மாலை பலபுனைந்து [2]மான்மதச்செஞ் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து—சோலையின்

311 மானு மயிலு மனைய மடந்தையருந்
தானு மழகு தரவிருப்பத்—தேனிமி

312 ரூற விளம்பாளை யுச்சிப் [3]படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்—வேறாக

313 வாக்கி மடனிறைத்து வண்டு [4]மதுநுரையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர—நோக்கி

314 வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
யருந்தித் தமர்மே லயர்ந்தாள்—பொருந்து

315 மயக்கத்து வந்து மனுதுங்க துங்க
னயக்கத் [5]திருக்கனவு நல்கு—முயக்கத்து

---

[பி-ம்.] [1] புயத்தான்றன். [2] மான்மதச் சாந்தெழுதி. [3] படுநறுந். [4] மதினுரையும். [5] தருங்கனவி னல்கு.

316 மிக்க விழைவு மிருகளிப்பு [1]மத்துயிலு
மொக்க விகல வுடனெழுந்து—பக்கத்து

317 வந்து சுடரு [2]மொருபளிக்கு வார்சுவரிற்
றந்த தனதுநிழ ருேக்கிப்—பைந்துகிற்

318 காசுசூ ழல்குற் [3]கலையே கலையாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து—வாசஞ்சேர்

319 சூடிய மாலை பரிந்து துணைமுலைமே
லாடிய சாந்தி னணிசிதைந்து—கூடிய

320 செவ்வாய் [4]விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா ணுதலும் [5]வெயரும்ப—விவ்வாறு

321 கண்டு [6]மகிழ்ந்த கனவை [7]நனவாகக்
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்—வண்டு[8]சூழ்

322 வேரிக் கமழ்கோதை வேருகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்—பாரித்த

323 தாமக் கவிகை நிழற்றச் சயதுங்க
ஞமக் கடாக்களிற்று நண்ணுதலுந்—தேமொழியுங்

324 கண்டது கெட்டேன் [9]கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் கோலமே—பண்டுலகிற்

325 செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமே யிவனென்று—கைதொழுது

326 தேறி யொருகாலுந் தேருப் [10]பெருமைய
லேறி யிரண்டா வதுமயங்கி—மாறிலாத்

---

[பி-ம்.] [1] மெய்த்துயிலு, மொக்க வருந்தி யுடனெழுந்து. [2] மொளிப் பளிக்கு. [3] கலைமே கலையாகத். [4] வெளுப்பக் கருங்கண் ணிணைசிவப்ப. [5] வியரும்ப; வெயர்வரும்ப. [6] மகிழ்ந்து. [7] நனவென்று. [8] வீழ். [9] கனவே. [10] பெரியமய.

327 தோழியர் தோண்மே லயர்ந்தாளத் தோழியரு
மேழுயர் யானை யெதிரோடி—[1]யாழியாய்

328 மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்குங்
கூடற்குங் கோழிக்குங் கோமானே—பாடலர்

329 சாருந் திகிரி தனையுருட்டி [2]யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே—சோர்வின்றிக்

330 காத்துக் குடையொன்று லெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே—போர்த்தொழிலா

331 லேனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே—மானப்போ

332 ரிம்ப ரெழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே—நம்பநின்

333 பாரிற் படுவன பன்மணியு நின்கட
னீரிற் படுவன நித்திலமு—நேரியநின்

334 வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலு—நிற்பணியக்

335 கொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்குந்
தண்டா [3]மரையின் றளிர்நிறமும்—பண்டத்

336 துயிலுங் கவர்ந்ததுநின் றொல்குலத்து [4]வேந்தர்
பயிலுந் திருநூற் படியே—புயல்வளவ

337 மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையுங்—கன்னித்

---

[பி-ம்.] [1] வாழியாய். [2] யீரேழு. [3] நிறையுந் தளிர்நிறமும். [4] நீங்கள்.

338 திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தாற்
றருநாண் மடமகளிர் தம்மை—யொருநாளவ்

339 வேனற் கரசன் விடுமே யவன்சினமிப்
பானற்க ணல்லா ளுயிர்ப்பரமே—யானக்காற்

340 குன்றே யெனத்தகுநின் கோபுரத்திற் றாங்குமணி
யொன்றே யுலகுக் கொழியுமே யென்றினைய

341 கூறி வணங்கிடு மிவ்வளவுங் கோதைமேற்
சீறி யநங்கன் சிலைவளைப்ப—மாறழியக்

342 குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
யுத்துங்க துங்க னுலா.

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

விக்கிரமசோழனுலா முற்றிற்று.

ஸ்ரீ:

# செய்யுண்முதற்குறிப்பகராதி.

[எண் - பக்களண்.]


| | |
|---|---|
| அகன்றலைவிசும்பு | 81 |
| அஞ்சனநெடுங்கயல் | 69 |
| அடல்விடங்கொள் | 16 |
| அணையோமினி | 51 |
| அம்மானைமுடிவிலா | 21 |
| அமரநாடாளு | 53 |
| அரணங்கொடிய | 27 |
| அருவினைவிடும் | 70 |
| அறமாமுயிர்க்கொலை | 65 |
| அறிவரியகுணத் | 30 |
| அறிவன்காதற் | 75 |
| அனகனமல | 81 |
| ஆதிநாள்புண | 32 |
| ஆதியேயாதியின்றி | 20 |
| ஆவாருனக்கு | 18 |
| ஆறுரைத்தான் | 7 |
| ஆனவாருக | 10 |
| இகழ்வார்களை | 48 |
| இசைபெருக | 33 |
| இடுகிடைதளர | 71 |
| இணைவளரிளமுலை | 38 |
| இயல்கொண்ட | 9 |
| இயல்பினுநிலநீர் | 73 |
| இருந்தாய்வேறே | 22 |
| இலைவயங்கு | 33 |
| இறந்துதாம் | 14 |
| உம்பர்நாடடைவார் | 17 |
| உரந்திகழும் | 44 |
| உரையோம்பயன் | 52 |
| உறவுலகை | 25 |
| உரிமையால்யாவ | 12 |
| ஊசற்குழை | 14 |
| என்மொழியி | 7 |
| ஒடுஞ்சகடத் | 32 |
| ஓதநெடும்புவி | 20 |
| ஓதாதுலகிற் | 61 |
| ஓரேழபங்கவுரை | 62 |
| கண்மூன்று | 28 |
| கலவமயிற்குல | 13 |
| காணுங்கண் | 77 |
| காதுசிலைவல்லமைக | 51 |
| காலனென்றுடல் | 17 |
| குறுகுமுறைபொறி | 11 |
| கொண்டல்வண்ண | 67 |
| கோமான்குளிர் | 47 |
| கோறன்மாற்றி | 28 |
| சிதைக்குங்கதிப் | 19 |
| சூதும்போதார் | 60 |
| செல்வரென்று | 66 |
| சோகமேதருந் | 29 |
| தந்தவுலகிற் | 10 |
| தருமத்திகிரிப் | 41 |
| தனஞ்சுமந்தலமரு | 80 |
| தெரிந்தவறமழை | 78 |
| தேர்வதொன்று | 15 |
| தெறினர்தொழுந் | 24 |
| தொடர்படுசடை | 66 |
| நண்போடன்பு | 45 |
| நாதனக்கமிழ்து | 30 |
| நாம்பரவுந்திற | 35 |
| நாயகனிவனென | 13 |
| நிகரின்முனிவ | 78 |
| நில்லாதசெல்வத்து | 63 |
| நின்றனநின்ற | 24 |
| நூன்மொழியுமாறு | 54 |
| நெஞ்சத்தருளுடை | 36 |
| பகரலாங்குணக் | 23 |
| பண்டயன்றலை | 68 |
| பதினறுவர் | 1 |
| பல்லுருவமெல்லாம் | 71 |
| பலவாம்பருவ | 86 |
| பற்றற்றவர்கள் | 72 |
| பாடுவதுன்னடித் | 32 |
| பாரேழுடையாயைப் | 62 |
| பிரமனேகாமனை | 61 |
| பிழைபிறங்க | 41 |
| புத்தேளுலகைப் | 40 |
| புயங்களாயிரம் | 26 |
| புரந்தரரும் | 19 |
| புலவர்மொழிந்த | 45 |
| புவனநாதரென் | 31 |
| பூநான்கும் | 2 |
| பெருந்தகைநின் | 8 |
| பெறுவதெண்டிசை | 69 |
| பேசிலகண்டமுநின் | 22 |
| பேணுந்தகைய | 74 |
| போங்குநாவலம் | 76 |
| பொறிவரிய | 5[illegible] |
| போதின்மிசைப் | [illegible] |
| போவார்போநெறி | [illegible] |
| போற்றுமிது | 64 |
| மண்ணுர்கதிர்மணி | 11 |
| மயிலாபுரிநின்றவ | 52 |
| மலர்தலை | 49 |
| மறங்கொணேமி | 20 |
| மனைக்குவிளக்க | 43 |
| மாயஞ்செய்யுந் | 34 |
| மின்னிடைமடவார் | 65 |
| முன்னைப்பிறப் | 47 |
| மைச்சந்தமாமுகில் | 37 |
| மொழிவழிவாராத | 73 |
| யாரேகால | 23 |
| வணங்கப்படுந்தெய்வ | 80 |
| வழங்கும்பதினெண் | 9 |
| வாகனமாகம் | 18 |
| விட்டகல்வதே | 66 |
| விடுவதுவெவ்வினை | 43 |
| விரையார்மலர்மிசை | 48 |
| விலங்காய்ப்பிறந்து | 64 |
| வீசுடல | 38 |
| வேண்டுதல் | 42 |